**July 20, 2026**

**Start Time 03:08:37 PM**

III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.

O.S.132/2025

Deposition of witness for the Plaintiff/PW1
solemnly by Thiru.M.Muthupandi, Junior Assistant,
in accordance with the provision of Act I for 1873 on 20-07-2026

| | | | |
|---|---|---|---|
| Name | : பாஸ்கரன் | Village | : |
| Father's / Husband's Name | : ரமணையா நாயுடு | Calling | : |
| Age | : | Taluk | : |

**குறுக்கு விசாரணை**

(சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.)

சத்திய நாராயணா தெரு, அம்பத்தூரில் என்னுடைய தகப்பனாருக்கு ஒரு வீடும், ஒரு இடமும் இருக்கின்றது என்றால் சரிதான். அந்த இடத்தின் விஸ்தீரணம் 3600 சதுரடி என்றால் சரிதான். இந்த 3600 சதுரடி கொண்ட இடத்தில் ஒரு வீடும் இருக்கின்றது. 21.05.2015 அன்று என்னுடைய தகப்பனாரும் நாங்கள் மூன்று சகோதரர்களும் சேர்ந்து அம்பத்தூரில் உள்ள சொத்தினை பொறுத்து பாகப்பிரிவினை செய்து பாகப்பிரிவினை பத்திரம் எழுதி கொண்டோம் என்றால் சரிதான். இந்த சொத்து என்னுடைய தகப்பனாரின் சுய சம்பாத்திய சொத்து. அந்த பாகப்பிரிவினை பத்திரத்தில் முதலாவது வாதியான என்னுடைய அண்ணன் வெங்கடேசனுக்கு 900 சதுரடி பரப்பளவு கொண்ட இடமும் வீடும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மீதமுள்ள 2700 சதுரடி கொண்ட இடத்திலுள்ள வீட்டை இடித்து என்னுடைய தகப்பனார் காலியிடத்தை விற்பனை செய்தார் என்றால் சரிதான். அந்த விற்பனை தொகையை நானும், என்னுடைய சகோதரர் ஸ்ரீநாத்தும், என்னுடைய தகப்பனாரும் பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான். இந்த விற்பனை தொகையில் என்னுடைய தகப்பனாருக்கு கிடைத்த பங்கு தொகையை வைத்து தான் தாவா சொத்தை என்னுடைய தகப்பனார் கிரையம் பெற்றார்

என்றால் சரியல்ல. கிரையம் பெறுவதற்கு எங்களிடம் பணம் கேட்டு நாங்கள் அந்த பணத்தை கொடுத்தோம். பின்பு அவர் அதனை திருப்பி கொடுத்துவிட்டார். 12.06.2024 அன்று நான் பிரதிவாதிகளுக்கு ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். அந்த அறிவிப்பில் நானும், 2 வது வாதி வெங்கடேசும் சேர்ந்து ஆளுக்கு ரூ.2,50,000/- எங்களுடைய தகப்பனாருக்கு கொடுத்ததாக சொல்லப்பட்டிருக்கின்றது என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் அந்த 5 லட்ச ரூபாய் பணத்தை எங்களுடைய தகப்பனார் திருப்பி தரவில்லை என்று சொல்லப்பட்டிருக்கின்றது என்றால் சரிதான். ஆனால் அந்த சமயத்தில் ஞாபகம் இல்லாமல் இப்படி சொல்லிவிட்டோம். நான் தாக்கல் செய்திருக்கின்ற வழக்குரையில் நானும் எனது சகோதரர் வெங்கடேசும் கொடுத்த 5 லட்ச ரூபாய் பணத்தை திருப்பி கொடுத்துவிட்டதாக சொல்லியிருக்கின்றோம் என்றால் சரிதான். 5 லட்ச ரூபாய் பணத்தை நாங்கள் எங்களுடைய தகப்பனாருக்கு கொடுக்காததால் தான் இப்படி முன்னுக்கு பின் முரணாக சொல்லியிருக்கிறோம் என்றால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பும்பொழுதே 2 வது பிரவாதிக்கு தாவா சொத்தினை பொறுத்து என்னுடைய தகப்பனார் ஒரு உயில் எழுதி வைத்திருக்கின்றார் என்ற விவரம் தெரியும் என்றால் சரியல்ல. நானும், என்னுடைய அண்ணன் வெங்கடேசும் என்னுடைய தாயையும் தந்தையையும் சரியாக பார்த்துக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. நாங்கள் எங்களுடைய பெற்றோர்களை சரியாக பார்த்துக்கொள்ளமால் என்னுடைய சகோதரர் 2 ஆம் பிரதிவாதி ஸ்ரீநாத் பெற்றோர்களை பார்த்துக்கொண்டதால் தான் என்னுடைய தகப்பனார் 2 ஆம் பிரதிவாதி ஸ்ரீநாத் பெயருக்கு தாவா சொத்தை பொறுத்து ஒரு உயில் எழுதி வைத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த உயில் இருப்பது தெரிந்து கொண்டே இந்த வழக்கை ஆதாயத்திற்காக தாக்கல் செய்திருக்கின்றோம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

End Time 03:30:34 PM